மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2021

தரம் ஐந்து மாணவர்களுக்கான


முன்னோடிப் பரீட்சை - இல-02

வினாத்தாள் - I



சுட்டெண்:- .....


நேரம் :- 1 மணித்தியாலம்

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.
* உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
* மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக.
* ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

(01) 

அருகில் தரப்பட்டுள்ள உருவின் வெற்றிடத்திற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

(1) 
(2) 
(3) 


(02) 

1 ஆவது தராசு




2 ஆவது தராசு

முதலாவது தராசு சமநிலையானதாகும். அதன்படி, இரண்டாவது தராசு சமநிலையாவதற்கு B பக்கத்திற்கு வைக்கப்பட வேண்டிய நிறை,

(1) 
(2) 
(3) 

(03) மாலை 5.00 மணியாகும்போது மரமொன்றின் நிழல் விழுந்திருப்பது,

(1) மேற்குத் திசையிலாகும். (2) கிழக்குத் திசையிலாகும். (3) தெற்குத் திசையிலாகும்.

(04) 

இச்சதுரமுகியிலிருந்து வெட்டக்கூடிய ஒருபக்க நீளம் 1cm ஐக் கொண்ட சதுரமுகிகளின் எண்ணிக்கை,

(1). 4 (2) 6 (3) 8

(05)


D		B		B		H		R
	R		D		D		L	
		H		R		B		D

இக்கூண்டினுள் தரப்பட்டுள்ள எழுத்துக்களில் இரண்டு எழுத்துக்கள் ஒரேயளவான தடவைகள் வீதம் இடம்பெற்றுள்ளன. அவ்விரண்டு எழுத்துக்களும்,

(1) L உம் H உம் (2) R உம் B உம் (3) D உம் B உம்

(06) பிள்ளையொன்று ஒரேயளவான நீளமுள்ள ஈர்க்குத் துண்டுகளைப் பயன்படுத்தி 6 சதுர வடிவங்களை அமைத்தது. அதன்படி, அவ்வீர்க்குத் துண்டுகளைப் பயன்படுத்தி அப்பிள்ளை அமைக்கக்கூடிய முக்கோண வடிவங்களின் எண்ணிக்கை,

(1) 8 (2) 7 (3) 9

(07) 



இவ்வுரு வரையப்பட்டுள்ள முறை,

(1) தவறானது
(2) சரியானது
(3) கூறமுடியாது




(08) பிள்ளையொன்று P எனும் இடத்திலிருந்து 20m வீதம் வடகிழக்கு, வடமேற்கு, தென்மேற்கு, தென்கிழக்கு ஆகிய திசைகளுக்குச் சென்று நின்றது. அதன்படி, அப்பிள்ளை தற்போது நிற்பது,

(1) P எனும் இடத்திலாகும். (2) P எனும் இடத்திலிருந்து 40m தூரத்திலாகும்.
(3) P எனும் இடத்திலிருந்து 80m தூரத்திலாகும்.

www.ikedu.lk


(09)  உரு A  உரு B

இங்கு காட்டப்பட்டுள்ள A, B ஆகிய உருக்களை ஒன்றன் மீது ஒன்று வைத்தால் புலப்படும் முறை,

(1)  (2)  (3) 

(10) மாதமொன்றின் 1 ஆம் திகதி பிறந்த குழந்தைக்கு அடுத்த மாதம் இறுதி நாளன்று வயது 59 நாட்களாகும். அதன்படி, அக்குழந்தை பிறந்த மாதம்,

(1) ஆகஸ்ட் (2) பெப்ரவரி (3) ஜூன்

(11) 


இவ்வுருவில் எண்கள் எழுதப்பட்டுள்ளது ஏதோவொரு கோலத்திற்கேற்பவாகும். அதன்படி, வெற்றுக்கூண்டிற்குப் பொருத்தமான எண்,


(1) 3 (2) 1 (3) 5

(12) குறித்த பாதையொன்றில் நீலம், சிவப்பு, மஞ்சள், நீலம், சிவப்பு, மஞ்சள்..... என்ற ஒழுங்குமுறையில் கொடிகள் நாட்டப்பட்டிருந்தன. முதலாவது கொடி நீல நிறமாகும். அதன்படி, 26 ஆவது கொடியின் நிறம்,

(1) நீலம் (2) சிவப்பு (3) மஞ்சள்

(13) முகம் பார்க்கும் கண்ணாடியொன்றினால் பார்க்கும்போது அதே வடிவில் புலப்படும் உருக்களைக் கொண்ட கார்ட்போர்ட் அட்டை,

(1)  (2)  (3) 

(14) 

பெட்டியொன்றினுள் உள்ள பச்சை நிறப் பந்துகள், மஞ்சள் நிறப் பந்துகள் தொடர்பான தகவல்களை இவ்வட்ட வரைபு காட்டுகிறது. பெட்டியிலுள்ள பச்சை நிறப் பந்துகளின் எண்ணிக்கை 60 ஆகும். அதன்படி, பெட்டியிலுள்ள மொத்தப் பந்துகளின் எண்ணிக்கை,

(1) 80 (2) 70 (3) 100

(15) மிகச் சரியாகக் கருத்தைப் புலப்படுத்தும் வாக்கியத்தைத் தெரிவு செய்க.

(1) நாம் உணவை சத்துள்ள தினமும் வேண்டும் உண்ண. (2) தினமும் நாம் சத்துள்ள உணவை உண்ண வேண்டும்.


(3) சத்துள்ள உணவை உண்ண வேண்டும் தினமும் நாம்.

(16) 3 , 6 , 12 , ☐ , 48 இவ்வெண்கோலத்தில் வெற்றுக்கூண்டிற்குப் பொருத்தமான எண்,


(1) 22 (2) 36 (3) 24

(17) ஏப்ரல் மாதத்தின் முதலாவது நாள் செவ்வாய்க்கிழமை ஆகும். அதன்படி, அம்மாதத்தில் உள்ள வியாழக்கிழமைகளின் எண்ணிக்கை,

(1) 5 (2) 4 (3) 6

(18) 

இத்திண்மத்தை அம்புக்குறி காட்டும் திசையிலிருந்து பார்த்தால் புலப்படும் முறை,

(1)  (2)  (3) 

(19) 2436 எனும் எண்ணில் இலக்கம் 2 இன் பெறுமதி இலக்கம் 4 இன் பெறுமதியைப் போல் எத்தனை மடங்காகும்?

(1) நான்கு மடங்காகும். (2) ஐந்து மடங்காகும். (3) மூன்று மடங்காகும்.

(20) வீடொன்றிற்கு நிறப்பூச்சு பூசுவதற்கு 2 நபர்களுக்கு 4 நாட்கள் செலவாகும். அவ்வீட்டிற்கு நிறப்பூச்சு பூசுவதற்கு 4 நபர்களுக்குச் செலவாகும் நாட்களின் எண்ணிக்கை,

(1) 1 நாள் (2) 3 நாட்கள் (3) 2 நாட்கள்

(21) கீதாவின் வயது சீதாவின் வயதைப் போல இரண்டு மடங்கை விட 3 வருடங்கள் அதிகமாகும். கீதாவின் வயது 15 வருடங்கள் எனின், சீதாவின் வயது,

(1) 6 வருடங்கள் (2) 5 வருடங்கள் (3) 4 வருடங்கள்

(22) 

இக்கடிகார முகத்தில் மணித்தியால முள்ளும் நிமிட முள்ளும் ஒன்றன் மீது ஒன்று அமைந்தது எத்தனை நிமிடங்களுக்கு முன்பாகும்?




(1) 15 நிமிடங்களுக்கு முன் (2) 20 நிமிடங்களுக்கு முன் (3) 25 நிமிடங்களுக்கு முன்

www.tkedu.lk

(23) ரமேஷ் வரிசையொன்றில் முதலாவதிலிருந்து 11 ஆவது நபராகவும், அவ்வரிசையில் கடைசியிலிருந்து 16 ஆவது நபராகவும் நின்றுகொண்டிருந்தான். அதன்படி, அவ்வரிசையில் நின்றுகொண்டிருப்பவர்களின் மொத்த எண்ணிக்கை,

(1) 27 (2) 25 (3) 26

(24) வித்தியாசமான உருவைத் தெரிவு செய்க.


(1)  (2)  (3) 

(25)

26	5	2
	8	
20	A	

அருகில் காட்டப்பட்டுள்ள கூண்டினுள் எண்கள் ஒரு கோலத்திற்கேற்ப எழுதப்பட்டுள்ளன. அதன்படி, A எனும் கூண்டினுள் வரவேண்டிய எண்,

(1) 17 (2) 18 (3) 16

(26) 

அருகே கூண்டினுள் உள்ள உருக்கள் ஒரு கோலத்திற்கேற்ப வரையப்பட்டுள்ளன. அதன்படி, வெற்றுக்கூண்டிற்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.


(1)  (2)  (3) 

(27) ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாத சொற்கள் இடம்பெற்றுள்ள கூண்டைத் தெரிவு செய்க.

(1)
பம்பரகந்த
தியலும
துன்ஹிந்த


(2)
சிவனொளிபாத
சிங்கராஜ
பீதுருதாலகால

(3)
மகாவலி
களனி
களு

(28) 

இவ்வுரு சம அளவிலான சிறிய சதுர வடிவங்கள் 9 இனால் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றில் ஒரு சிறிய சதுர வடிவத்தின் ஒருபக்க நீளம் 5cm ஆகும். அதன்படி, இவ்வுருவை அமைப்பதற்கு 5cm நீளம் கொண்ட சிறிய கம்பித்துண்டுகள் எத்தனை தேவைப்படும்?

(1) 24 (2) 25 (3) 21

(29) 

உருவில் காட்டப்பட்டுள்ள முக்கோண வடிவக் கடதாசியானது முதலில் முறிந்த கோட்டின் வழியே இரண்டாக மடிக்கப்பட்டது. அதன்பின் இரு பக்கங்களையும் சேர்த்துப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டப்பட்டது. அதன்படி, வெட்டியபின் கிடைக்கக்கூடிய முக்கோண வடிவங்களின் எண்ணிக்கை,

(1) 3 (2) 4 (3) 2

(30) இரு வெற்றுக்கூண்டுகளுக்கும் பொருத்தமான இரு கணிதச் செய்கைகளையும் முறையே தெரிவு செய்க.

$$8 \square 7 = 5 \square 3$$

(1) $-, +$ (2) $+, \times$ (3) $\times, \div$

(31) பின்வரும் இரு ஆங்கிலச் சொற்களிலும் T, E, N எனும் மூன்று ஆங்கில எழுத்துக்களுக்கும் பதிலாக 6, 5, 2 எனும் இலக்கங்கள் (இதே ஒழுங்கின்றி) இடப்பட்டு அவ்விலக்கங்கள் ஏறுவரிசையில் எழுதப்பட்டுள்ளன.

TENT = 2 , 2 , 5 , 6
TEEN = 2 , 5 , 6 , 6


அதன்படி, "N" எழுத்தினால் காட்டப்படும் இலக்கம்,

(1) 5 (2) 2 (3) 6

(32) பின்வரும் கூற்றுக்களில் தனிப்பட்ட கருத்தைக் காட்டும் கூற்றைத் தெரிவு செய்க.

(1) கலா வாவியைக் கட்டியவர் தாதுசேன மன்னராவார்.
(2) நந்தியாவட்டை மலர் வெள்ளை நிற மலராகும்.
(3) அன்னாசிப் பழத்தை விட மாம்பழம் சுவையான பழமாகும்.


www.lkedu.lk

(33) 

இக்கடிகாரத்தின் நேரம் 1 மணித்தியாலத்திற்கு 5 நிமிடங்கள் கூடுதலாகச் செல்லும். அதன்படி, இன்னும் இரண்டு மணித்தியாலங்களில் இக்கடிகார முகம் காட்டும் நேரம்,

(1) 5.05 (2) 5.10 (3) 4.50

(34) பின்வரும் ஐந்து உருக்களையும் ஒரு கோலத்திற்கு ஏற்ப ஒழுங்குபடுத்தினால் நடுவில் வரும் உரு,



(1) (2) (3)


(35) என்னிடம் 9 நாணயக் குற்றிகள் உள்ளன. அந்நாணயக் குற்றிகளின் மொத்தப் பெறுமதி ரூபா 23.00 ஆகும். அதன்படி, என்னிடமுள்ள நாணயக் குற்றிகள்,

(1) ரூபா 1.00 நாணயக் குற்றிகள் 3, ரூபா 2.00 நாணயக் குற்றிகள் 4, ரூபா 5.00 நாணயக் குற்றிகள் 2

(2) ரூபா 1.00 நாணயக் குற்றிகள் 4, ரூபா 2.00 நாணயக் குற்றிகள் 3, ரூபா 5.00 நாணயக் குற்றிகள் 2

(3) ரூபா 1.00 நாணயக் குற்றிகள் 4, ரூபா 2.00 நாணயக் குற்றிகள் 2, ரூபா 5.00 நாணயக் குற்றிகள் 3

(36) பின்வரும் உருவில் வெறுமையாக உள்ள பகுதியை நிரப்புவதற்குப் பொருத்தமான பகுதிகளைத் தெரிவு செய்க.




(37) பெட்டியொன்றினுள் நீல நிறப் பந்துகள் 9 உம், மஞ்சள் நிறப் பந்துகள் 9 உம் உள்ளன. அப்பந்துகளில் அதிகமானவை பிளாஸ்டிக் பந்துகள் ஆகும். மற்றையவை அனைத்தும் இறப்பர் பந்துகள் ஆகும். அதன்படி, கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) பெட்டியினுள் பிளாஸ்டிக் பந்துகள் 12 உம், இறப்பர் பந்துகள் 7 உம் உள்ளன.

(2) பெட்டியினுள் இறப்பர் பந்துகள் 11 உம், பிளாஸ்டிக் பந்துகள் 7 உம் உள்ளன.

(3) பெட்டியினுள் பிளாஸ்டிக் பந்துகள் 13 உம், இறப்பர் பந்துகள் 5 உம் உள்ளன.

(38) நாணயக் குற்றியொன்று மேலே சுண்டிவிடப்பட்டபோது, A பக்கத்தை விட B பக்கம் இரு மடங்கு அதிகமாக விழுந்தது. அவ்விபரங்கள் கீழே வரைபில் காட்டப்பட்டுள்ளன.



மேற்படி வரைபின்படி, நாணயக் குற்றி மேலே சுண்டிவிடப்பட்ட தடவைகளின் மொத்த எண்ணிக்கை,

(1) 27 (2) 18 (3) 24

(39) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாவிற்கான விடையைத் தெரிவு செய்க.

அம்புயம் வாடித் தளர்ந்ததம்மா அயல்
ஆம்பலும் கண்டு களிக்குதம்மா
இம்பருலகில் இயல்பிதம்மா மதிக்
கின்னார் இனியாரும் உண்டோ அம்மா!

இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள பொழுது யாது?

(1) காலைப்பொழுது (2) நண்பகற்பொழுது (3) மாலைப்பொழுது

(40) 6 இனாலும் 4 இனாலும் மீதியின்றி வகுபடக்கூடிய 10 இற்கும் 20 இற்கும் இடையிலுள்ள எண்களின் எண்ணிக்கை,

(1) 2 (2) 1 (3) 3

www.ikeduk

LEARN EASY
– KNOWLEDGE IS POWER –
www.learneasy.lk

தரம் 6 ~ 11 வகுப்பு

ICT
(Englidh Medium)
(தமிழ் Medium)

By :- S.முரளி

அழையுங்கள்

76667-4945
www.learneasy.lk

LEARN EASY
– KNOWLEDGE IS POWER –
www.learneasy.lk

தரம் 9 10 11 வகுப்பு

கணிதம்

A .வாகீஷன்

அழையுங்கள்

76667-4945
www.learneasy.lk

LEARN EASY
– KNOWLEDGE IS POWER –
www.learneasy.lk

தரம் 10 & 11 வகுப்பு

ICT
(தமிழ் Medium)

By :- P.நர்மதா

அழையுங்கள்

76667-4945
www.learneasy.lk

UNDER GRADUATE

EXTERNAL PHARMACISTS EXAMINATION



Monthly Fees 2500/-

External Pharmacist Examination Course
BATCH III

Teacher :
Mr. Nehru Sir

Class Days : Saturday , Sunday
Class Time : .6.00 pm - 9.00 pm

MINIMUM EDUCATIONAL QUALIFICATION

- GCE O/L - Pass in English
- GCE A/L - 3 Ordinary Passes in Science Subject including Chemistry
- Age - Unlimited

FOR MORE DETAILS
76667- 4945 | www.LearnEasy.lk

CERTIFICATE IN PHARMACY



Monthly Fees 1,000/-

Certificate in Pharmacy

Teacher : Mr. Nehru Sir

Class Days : Friday
Class Time
9.00AM - 12.30 PM
Age - Unlimited

FOR MORE DETAILS
76667- 4945 | www.LearnEasy.lk

LEARN EASY
– KNOWLEDGE IS POWER –
www.learneasy.lk

தரம் 10 & 11 வகுப்பு

வணிகக்கல்வி

By : S.ரகு

அழையுங்கள்

76667-4945
www.learneasy.lk

LEARN EASY
– KNOWLEDGE IS POWER –
www.learneasy.lk

(English Medium)

தரம் 6 7 10 11

விஞ்ஞானம்

zoom

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் மட்டுமே. அழையுங்கள்

M.JEROM 76667–4945

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத்
தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2021
தரம் ஐந்து மாணவர்களுக்கான

முன்னோடிப் பரீட்சை - இல-02

வினாத்தாள் - II

சுட்டெண் :- .....

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  - *** உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
  - *** மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**
  - *** இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.**
  - *** எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
  - *** விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
  - *** விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**
  - *** செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.**

(01) பின்வரும் பந்தியை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை எழுதுக.

நமது நாட்டின் மலை நாட்டுப் பகுதிகளிலும் ஒரு சில தாழ்நிலப் பிரதேசங்களிலும் சுவையான தேயிலை பயிரிடப்படுகின்றது. பலநூறு ஏக்கர்கள் கொண்ட நிலப்பரப்புகளில் தேயிலை நிரை நிரையாக வளர்க்கப்படுவதால் பச்சைக் கம்பளம் விரித்தது போல மலை முழுவதும் பசுமை படர்ந்து அழகு ததும்பக் காட்சி தரும்.

(1) இப்பந்தியில் வந்துள்ள அடுக்குமொழிச் சொல்லை எழுதுக. .....

(2) மலை நாட்டுப் பகுதியில் பயிரிடப்படும் பயிர் எது? .....

(3) "மடு" என்பதன் எதிர்கருத்துச் சொல்லை எழுதுக. .....

(4) "வனப்பு" என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை இனங்கண்டு எழுதுக. .....

(5) "நாட்டின்" என்பதன் பன்மைச் சொல்லை எழுதுக. .....

(02) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான வினைச்சொல்லை அடைப்பிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(1) ஆசிரியர் வகுப்பறைக்கு வந்து பாடம் ..... (கற்பித்தாள் / கற்பித்தார்)

(2) ஆசிரியர் கூறியதை மாணவர்கள் கவனமாகக் ..... (கேட்டனர் / கேட்கிறான்)

(03) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (X) எனவும் எதிரேயுள்ள அடைப்பினுள்ளே அடையாளம் இடுக.

(1) "நான்" முன்னிலை ஒருமைப் பெயர்ச்சொல்லாகும். ( )

(2) "சென்றோம்" உயர்திணை தன்மை பன்மை இறந்தகால வினைச்சொல்லாகும். ( )

(04) பின்வரும் ஒவ்வொரு சொல்லையும் வைத்து வாக்கியம் அமைக்குக.

(1) நிரை :- .....

(2) நிறை :- .....

(05) பின்வரும் சொற்தொகுதிகள் ஒவ்வொன்றிலும் சரியாக எழுத்துக்கூட்டப்பட்டுள்ள சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(1) அறுகோணவடிவு / அருகோணவடிவு / அறுகோனவடிவு

(2) குழிர்ச்சியடைதல் / குளிர்ச்சியடைதல் / குலிர்ச்சியடைதல்

(06) பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

(1) மாங்காய் :- ..... (2) நூலகம் :- .....

(07) பின்வரும் கருத்திற்குப் பொருத்தமான பழமொழியைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

எதையும் ஆராய்ந்தே செய்தல் வேண்டும். (இரு தோணியில் கால் வைக்காதே / ஆழம் அறியாமல் காலை விடாதே)

(08) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.

பூனை சீறும் அதுபோல அணில் .....

(09) பின்வரும் இணைமொழிகளைப் பூர்த்தி செய்க.

(1) ஊண் ..... (2) வாழ்வு .....

www.lkedu.lk

(10) **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான இரட்டைக்கிளவியைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(1) யாமினி சுவையான உணவை (மளமள / கடகட) எனச் சாப்பிட்டாள்.

(2) தோட்டக்காரன் தோட்ட வேலைகளை (குளுகுளு / பட்பட்) என்று செய்து முடித்தான்.

(11) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்பினுள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(1) Where ..... (are / is) my pencil? (2) I ..... (have / has) a cat.

(12) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்துக்களைத் தமிழில் எழுதுக.

(1) Stand up :- ..... (2) Come back :- .....

(13) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு தமிழ்ச் சொல்லிற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.

(1) தும்புத்தடி :- ..... (2) கதிரை :- .....

(14) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.

ම(ட்)ட ஆப்ப ஒன. :- .....

(15) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

நீங்கள் யார்? :- .....


(16) கீழே தரப்பட்டுள்ள 12 மணித்தியாலக் கடிகார நேரத்தை 24 மணித்தியாலக் கடிகார நேரத்தில் எழுதுக.

பி.ப 11.05 :- .....


(17) **XIX** இற்கு முன்னுள்ள எண்ணை உரோம எண்குறிகளில் எழுதுக. :- .....

(18) (1) 100000 - 1 இன் பெறுமானம் யாது? .....


(2) 7973 = 7000 + ☐ + 70 + 3 ஆகும். அதன்படி, வெற்றுக்கூண்டிற்குப் பொருத்தமான எண்ணை வெற்றுக்கூண்டினுள்ளேயே எழுதுக.

(19) 

இவ்விரு எண்சட்டங்களும் காட்டும் எண்களுக்கிடையிலான வித்தியாசத்தை இலக்கங்களில் எழுதுக. .....


(20) 
உருவின்படி, குடை இருப்பது பந்திற்குத் தென்மேற்குத் திசையிலாகும். அதன்படி, கதிரை இருப்பது மேசைக்கு எத்திசையிலாகும்?


.....

(21) 
இவ்வுருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதி முழு உருவின் என்ன பங்காகும்?

.....

(22) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு உருவினதும் சமச்சீர் அச்சுக்களைத் தெளிவாக வரைந்து காட்டுக.

(1) 

(2) 

(23) நூறினிடத்து இலக்கம் 5, ஆயிரத்தினிடத்து இலக்கம் 2, ஒன்றினிடத்து இலக்கம் 7, பத்தினிடத்து இலக்கம் 1 ஆகவுள்ள எண் யாது? .....

(24) 4m நீளமுள்ள கம்பியொன்றிலிருந்து,

(1) 70cm நீளமுள்ள எத்தனை கம்பித்துண்டுகளை வெட்டலாம்? .....

(2) மீதியாக இருக்கும் கம்பித்துண்டின் நீளம் யாது? .....

(25) பிள்ளையொன்று மு.ப 5.45 க்கு வீட்டிலிருந்து புறப்பட்டு மு.ப 7.15 க்கு பாடசாலையை அடைந்தது. அதன்படி, அப்பிள்ளைக்கு வீட்டிலிருந்து பாடசாலைக்குச் செல்வதற்கு எடுத்த காலத்தை மணித்தியாலத்திலும் நிமிடங்களிலும் தருக.

..... மணித்தியாலம் ..... நிமிடங்கள்

www.lkedu.lk

சுட்டெண்:.....


(26) நான் 2 அன்னாசிப் பழங்களைக் கொள்வனவு செய்து வியாபாரிக்கு ரூபா 500.00 நாணயத் தாளொன்றைக் கொடுத்தபோது, வியாபாரி என்னிடம் ரூபா 260.00 ஐ மீதியாகக் கொடுத்தார். அதன்படி, அன்னாசிப் பழமொன்றின் விலை யாது? .....

(27) 4 , 10 , 16 , 22 , 34 கோலமொன்றை அமைப்பதற்கு இவ்வெண்வரிசைக்குச் சேர்க்கப்பட வேண்டிய எண் யாது?.....

(28) (1) "முப்பத்தொராயிரத்துப் பத்து" என்பதை இலக்கங்களில் எழுதுக. .....

(2) வெற்றிடத்தை நிரப்புக. $80000 + 0 + 600 + 0 + 2 =$ .....

(29) குறித்த பாடசாலையொன்றில் 5A, 5B ஆகிய வகுப்புக்களில் இருக்கும் மாணவர்களின் எண்ணிக்கையைக் கீழுள்ள படவரைபு காட்டுகிறது. அதன்படி, வினவப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை எழுதுக.



(1) 5B வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 40 ஆகும். அதன்படி, 5A வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது? .....

(2) 5C வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 24 ஆகும். இவ்வெண்ணிக்கையை படவரைபின் உரிய வெற்றிடத்தில் வரைந்து காட்டுக.

*** இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) மனிதனுக்கு நன்மை செய்யும் பூச்சி,

(1) இலையான் (2) தேனீ (3) நுளம்பு

(31) பயிர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் பிராணி,

(1) வெட்டுக்கிளி (2) மண்புழு (3) வண்ணத்துப்பூச்சி

(32) காந்தத்தினால் கவரப்படும் பொருள்,

(1) கண்ணாடி (2) இரும்பு (3) இறப்பர்

(33)  மாணிக்கம் அகழ்ந்தெடுக்கப் பயன்படும் இவ்வுபகரணத்தின் பெயர்,

(1) மணியாசு (2) அரம் (3) நாம்புவ

(34) முட்கள் மூலம் கொழுகொம்புடன் இணைந்து படர்ந்து செல்லும் கொடி வகை,

(1) சாத்தாவாரி (2) பாகல் (3) வெற்றிலை

(35) தினசரி பத்திரிகையொன்றில் பிரதான செய்திகளைக் காணக்கிடைப்பது,

(1) நடுப்பக்கத்தில் (2) முதற்பக்கத்தில் (3) இறுதிப்பக்கத்தில்

(36) முட்கள் உள்ள தாவரம் அல்லாதது,

(1) எலுமிச்சை (2) வட்டுக்கத்தரி (3) தேங்காய்ப்பூக்கீரை

(37) ஒன்றுக்கொன்று ஒத்த வடிவத்தைக் கொண்ட தாவர இலைகள்,

(1) மிளகு - வெற்றிலை (2) வல்லாரை - ஆடாதோடை (3) திப்பிலி - இஞ்சி

(38) "கண்டமாலை" நோய்க்குப் பிரதான காரணம்,

(1) இரும்புச்சத்து குறைபாடு (2) கல்சியம் குறைபாடு (3) அயடீன் குறைபாடு

(39) குட்டியீன்று இனம்பெருக்கும் பிராணி,

(1) வாத்து (2) வெளவால் (3) மயில்

(40) மைதானத்தின் நடுவில் பொருத்தப்படும் வலையின் இரு பக்கங்களிலும் இருந்து விளையாடப்படும் விளையாட்டு அல்லாதது,

(1) கரப்பந்து (2) டெனிஸ் (3) வலைப்பந்து

(41) பின்வரும் கருவிகளில் இரும்பினால் மட்டும் ஆக்கப்பட்ட கருவி,

(1) மண்வெட்டி (2) அலவாங்கு (3) கோடரி

(42) கட்டாயமாகக் காலாவதியாகும் திகதியைப் பார்த்து வாங்க வேண்டிய பொருள்,

(1) யோகட் (2) சவர்க்காரம் (3) தீப்பெட்டி

www.lkedu.lk

(43) கால்களற்ற, ஊர்ந்து செல்லும் பிராணி,

(1) பூரான் (2) மரவட்டை (3) அட்டை

(44) ஓட்டினுள் புகுந்து பாதுகாப்புத் தேடாத பிராணி,

(1) நத்தை (2) இறால் (3) ஆமை

(45) வண்ணத்துப்பூச்சி முட்டையிடுவது,

(1) இலையின் கீழ்ப்பகுதியில் (2) இலையின் மேற்பகுதியில் (3) பூவின் மேற்பகுதியில்

(46) தனது உமிழ் நீரினால் வாழ்விடத்தை அமைக்கும் பிராணி,

(1) குளவி (2) இராமபாணம் (3) சிலந்தி

(47) ஊசித்துளைக் கமராவின் மூலம் ஒரு பொருளைப் பார்க்கும்போது,

(1) தலைகீழாகத் தெரியும். (2) சிறிதாகத் தெரியும். (3) பெரிதாகத் தெரியும்.

(48) இலங்கையில் கடற்கரை இருக்கும் ஒரு மாகாணம்,

(1) மத்திய மாகாணம் (2) தென் மாகாணம் (3) சப்ரகமுவ மாகாணம்

(49) உரோமம் இல்லாத பிராணிகள்,

(1) தவளை, எலி (2) பல்லி , உடும்பு (3) முயல் , அணில்

(50) மின்காந்தம் பயன்படுத்தப்படும் உபகரணமொன்று,

(1) மின்சோதிப்பான் (2) மின்குமிழ் (3) மின்மணி

(51) "கொல்லர்" பயன்படுத்தும் உபகரணமொன்று அல்லாதது,

(1) உலைத்துருத்தி (2) தீதாள் (3) பட்டடை

(52) இறைச்சியை நீண்ட காலம் பதப்படுத்தி வைத்திருப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட பண்டைய முறை,

(1) தேனில் அமிழ்த்தி வைத்தல். (2) குளிர்சாதனப் பெட்டியினுள் வைத்தல.

(3) உப்புக் கரைசலில் அமிழ்த்தி வைத்தல்.

(53) விலங்குகளின் உடல்களில் ஒட்டிப் பரம்பலடையும் வித்து,

(1) எருக்கலை (2) துத்திரி (3) எண்ணை

(54) தாவர இலைகளை உணவாக உட்கொள்ளும் பிராணி,

(1) நத்தை (2) இராமபாணம் (3) தேன் குருவி

(55) பின்வரும் உணவுப் பொருட்களுள் உற்பத்தித் திகதிக்கும் காலாவதியாகும் திகதிக்குமிடையில் குறைந்த காலத்தைக் கொண்டிருப்பது,

(1) ஜாம் (2) டின்மீன் (3) யோகட்

(56) இலங்கை அரச இலச்சினையில் சூரியனும் சந்திரனும் அடையாளப்படுத்துவது,

(1) தன்னிறைவையாகும். (2) நிலைத்திருத்தலையாகும். (3) சௌபாக்கியத்தையாகும்.

(57) ஒலிம்பிக் கொடியில் காணப்படும் வட்டங்களின் எண்ணிக்கை,

(1) 5 (2) 4 (3) 6

(58) ஊசித்துளைக் கமராவின் திரையைச் செய்யப் பயன்படுவது,

(1) முகம் பார்க்கும் கண்ணாடித் துண்டு (2) வெள்ளை நிறக் கார்ட்போர்ட் துண்டு

(3) வெள்ளைத் திசுத் தாள்

(59) மரவள்ளிக் கிழங்கில் அதிகமாக உள்ள போசணைப் பொருள்,

(1) புரதம் (2) காபோவைதரேற்று (3) விற்றமின்

(60) "மிருகங்கள் எமது நண்பர்கள்" எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

(1) .....

(2) .....

(3) .....

www.lkedu.lk


www.learneasy.lk இல்
தரம்5 (2021)
வகுப்புக்கள்
நடைபெறுகின்றன
திங்கள் முதல் வெள்ளி வரை
காலை 5 மணிமுதல் 6.15 மணிவரை
உங்கள் பதிவுகளுக்கு இன்றே அழையுங்கள்
76667 4945


www.learneasy.lk இல்
தரம் 3
வகுப்புக்கள்
நடைபெறுகின்றன
உங்கள் பதிவுகளுக்கு
இன்றே அழையுங்கள்
76667 4945


www.learneasy.lk இல்
தரம்4 (2021)
வகுப்புக்கள்
நடைபெறுகின்றன
திங்கள் முதல் வெள்ளி வரை
இரவு 7 மணி தொடக்கம் 8 மணிவரை
உங்கள் பதிவுகளுக்கு இன்றே அழையுங்கள்
76667 4945


LEARN EASY
KNOWLEDGE IS POWER
www.learneasy.lk
தரம் 11 வகுப்புக்கள்
வணிகக்கல்வி
By : S.ரகு
SUNDAY & MONDAY : 7PM - 8PM
இலவசம்
அழையுங்கள்
76667-4945
www.learneasy.lk


LEARN EASY
KNOWLEDGE IS POWER
www.learneasy.lk
தரம் 6 ~ 11 வகுப்பு
தமிழ்
By : S.சிவநிதி
அழையுங்கள்
76667-4945
www.learneasy.lk


LEARN EASY
KNOWLEDGE IS POWER
www.learneasy.lk
தரம் 6 ~ 11 வகுப்பு
விஞ்ஞானம்
ஆ.ரஜீவன்
அழையுங்கள்
76667-4945
www.learneasy.lk


LEARN EASY
KNOWLEDGE IS POWER
www.learneasy.lk
தரம் 6 ~ 11 வகுப்பு
விஞ்ஞானம்
ச.சங்கீதன்
அழையுங்கள்
76667-4945
www.learneasy.lk


LEARN EASY
KNOWLEDGE IS POWER
www.learneasy.lk
தரம் 6 ~ 11 வகுப்பு
வரலாறு
தரம் 6 ~ 8
By : V.மோகன்
தரம் 9 ~ O/L
By : M.மயூரன்
அழையுங்கள்
76667-4945
www.learneasy.lk


LEARN EASY
KNOWLEDGE IS POWER
www.learneasy.lk
தரம் 6 ~ 11 வகுப்பு
ENGLISH
P. Mathura
அழையுங்கள்
76667-4945
www.learneasy.lk

www.kalvi.lk

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத்
தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2021

தரம் ஐந்து மாணவர்களுக்கான

முன்னோடிப் பரீட்சை - இல-02

விடைப்பத்திரம்

வினாத்தாள் - I

(01) 3	(02) 1	(03) 2	(04) 3	(05) 2
(06) 1	(07) 2	(08) 1	(09) 3	(10) 2
(11) 1	(12) 2	(13) 3	(14) 1	(15) 2
(16) 3	(17) 2	(18) 1	(19) 2	(20) 3
(21) 1	(22) 2	(23) 3	(24) 2	(25) 1
(26) 3	(27) 2	(28) 1	(29) 3	(30) 2
(31) 1	(32) 3	(33) 2	(34) 1	(35) 3
(36) 2	(37) 3	(38) 1	(39) 3	(40) 2

வினாத்தாள் - II

(01) (1) நிரை நிரையாக (2) தேயிலை (3) மலை (4) அழகு (5) நாடுகளின்

(02) (1) கற்பித்தார் (2) கேட்டனர் (03) (1) X (2) ✓

(04) பொருத்தமான வாக்கியங்கள் எழுதியிருப்பின் புள்ளிகள் வழங்கவும். (05) (1) அறுகோணவடிவு (2) குளிர்ச்சியடைதல்



(06) (1) மா+காய் (2) நூல்+அகம் (07) ஆழம் அறியாமல் காலை விடாதே. (08) கீச்சிடும்

(09) (1) உறக்கம் (2) தாழ்வு (10) (1) மளமள (2) பட்பட் (11) (1) is (2) have

(12) (1) எழுந்து நில்லுங்கள். (2) திரும்பி வரவும். (13) (1) Broom (2) Chair


(14) எனக்கு அப்பம் வேண்டும். (15) ஒ(B)ப கவு(Dh)த? (16) 23:05 (17) XVIII

(18) (1) 99999 (2) 900 (19) 707 (20) தென்கிழக்குத் திசையில் (21) $\frac{4}{10}$

(22) (1)  (2) 

(23) 2517 (24) (1) 5 (2) 50cm

(25) 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள் (26) ரூபா 120.00 (27) 28 (28) (1) 31010 (2) 80602

(29) (1) 32 (2) 

(30) 2	(31) 1	(32) 2	(33) 3	(34) 1
(35) 2	(36) 3	(37) 1	(38) 3	(39) 2
(40) 3	(41) 2	(42) 1	(43) 3	(44) 2
(45) 1	(46) 3	(47) 1	(48) 2	(49) 2
(50) 3	(51) 2	(52) 1	(53) 2	(54) 1
(55) 3	(56) 2	(57) 1	(58) 3	(59) 2

(60) எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியான முறையில் அமையுமாறு வாக்கியங்கள் எழுதியிருப்பின் புள்ளிகள் வழங்கவும்.

புள்ளித்திட்டம்

வினாத்தாள் I ($2\frac{1}{2}$ X 40 = 100 புள்ளிகள்)

வினாத்தாள் II (1) 5 புள்ளிகள் (2) 2 புள்ளிகள் (3) 2 புள்ளிகள் (4) 2 புள்ளிகள் (5) 2 புள்ளிகள் (6) 2 புள்ளிகள்

(7) 1 புள்ளி (8) 1 புள்ளி (9) 2 புள்ளிகள் (10) 2 புள்ளிகள் (11) 2 புள்ளிகள் (12) 2 புள்ளிகள்

(13) 2 புள்ளிகள் (14) 1 புள்ளி (15) 1 புள்ளி (16) 2 புள்ளிகள் (17) 2 புள்ளிகள் (18) 3 புள்ளிகள்

(19) 2 புள்ளிகள் (20) 2 புள்ளிகள் (21) 2 புள்ளிகள் (22) 3 புள்ளிகள் (23) 2 புள்ளிகள் (24) 3 புள்ளிகள்

(25) 2 புள்ளிகள் (26) 2 புள்ளிகள் (27) 2 புள்ளிகள் (28) 3 புள்ளிகள் (29) 3 புள்ளிகள்

(30 – 59) 30 புள்ளிகள் (60) 6 புள்ளிகள், முழு விடைத்தாளையும் கவனத்திற்கொண்டு கையெழுத்து, இலக்கங்கள் போன்றவை தெளிவாகவும் சரியாகவும் எழுதப்பட்டிருப்பின் 2 புள்ளிகள் வழங்கவும்.

www.lkedu.lk